செ.வெ.எண்: 38 நாள்: 20.04.2020

**கரூர் மாவட்டம்**

**கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட நிலையில் அனுமதிக்கப்பட்டு பூரண குணமடைந்த 48 நபர்கள் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் - கொரேனா தொற்று தடுப்பு பணிகளுக்கான கண்காணிப்பு அலுவலர்கள் ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திரு.சி.முனியநாதன்.இஆப., மற்றும் கூடுதல் காவல்துறை இயக்குநர் (சிலை கடத்தல் தடுப்பு பிரிவு) திரு.அபய்குமார்சிங்.இகாப., மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., ஆகியோர் பழக்கூடை கொடுத்து, கைதட்டி வழியனுப்பி வைத்தனர்**

அதன் விபரம் வருமாறு:

கரூர், நாமக்கல் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் கொரோனா தொற்று பாதிக்கப்பட்ட நபர்கள் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மருத்துவர்களின் தொடர் சிகிச்கையின் காரணமாக 48 நபர்கள் பூரண குணமடைந்து அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கும் நிகழ்வு இன்று(20.04.2020) நடைபெற்றது. கரூர், நாமக்கல் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களுக்கு கொரோனா தொற்று தடுப்பு பணிகளுக்கான கண்காணிப்பு அலுவலர்கள் **ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திரு.சி.முனியநாதன்.இஆப., மற்றும் கூடுதல் காவல்துறை இயக்குநர் (சிலை கடத்தல் தடுப்பு பிரிவு) திரு.அபய்குமார்சிங்.இகாப., மற்றும்** மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., ஆகியோர் அனைவருக்கும் பழக்கூடை கொடுத்து வாழ்த்து தெரிவித்து கைதட்டி வழியனுப்பி வைத்தனர்.

அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அனைத்து மருத்துவர்கள், செவிலியர்கள், துாய்மைப்பணியாளர்கள் என அனைவரும் சமூக விலகலை கடைபிடித்து வரிசையாக நின்று குணமடைந்தவர்களை கைத்தட்டி வழியனுப்பி வைத்த நெகிழ்ச்சியான சம்பவம் இன்று நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா தொற்று பரவாமல் தடுக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையிலும், மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர், மதிப்பிற்குறிய தலைமை செயலாளர், சுகாதாத்துறை செயலாளர் ஆகியோரின் அறிவுறுத்தலின் அடிப்படையிலும் கரூர் மாவட்டத்தில் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் அவ்வப்போது கரூர் மாவட்டத்தின் பல பகுதிகளில் கொரோனா தொற்று தடுப்பு பணிகளை பார்வையிட்டு அறிவுரைகளை வழங்கி வருகின்றார்கள்.

இந்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் தொடர் முயற்சியால் கரூர் மாவட்டத்திற்கு அற்பணிக்கப்பட்டுள்ள இந்த அரசு மருத்துவக்கல்லூரி என்பது இன்றைய சூழலில் ஒரு வரப்பிரசாதமாக இருக்கின்றது.

உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்புடன் கூடிய மருத்துவக்கல்லூரியில் உயர்தரமான சிகிச்சைகளை மருத்துவர்கள் தொடர்ந்து வழங்கி வருகின்றார்கள். அதனால்தான், கரூர் மட்டுமல்லாது நாமக்கல் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய சூழலில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டவர்களில் மருத்துவர்களின் தொடர் சிகிச்சையால் பூரண குணமடைந்த கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த 2 நபர்களும், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த 33 நபர்களும், திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த 13 நபர்களும் என மொத்தம் 48 நபர்கள் இன்று அவரவர் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இன்றைய தகவலின்படி கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனையில் மொத்தம் 76 நபர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் கரூரைச் சேர்ந்த 24 நபர்கள், திண்டுக்கல்லைச் சேர்ந்த 33 நபர்கள், நாமக்கல்லைச்சேர்ந்த 10 நபர்கள் என மொத்தம் 67 நபர்கள் தொற்று பாதிப்பு உள்ளவர்கள்.

மீதமுள்ள 9 நபர்கள் தொற்று அறிகுறி காரணமாக தீவிர கண்காணிப்பில் உள்ளவர்கள். அவர்களுக்கு தொற்று பாதிப்பு இல்லை.

கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தொற்று பாதிக்கப்பட்ட நிலையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவர்களின் தொடர் சிகிச்சையால் பூரண குணமடைந்த 101 நபர்களும், தொற்று அறிகுறி காரணமாக அனுமதிக்கப்பட்டு தொடர் மருத்துவக்கண்காணிப்பில் வைக்கப்பட்டு 28 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டு மீண்டும் எடுத்த இரத்தப்பரிசோதனையில் தொற்று இல்லை என்று உறுதிசெய்யப்பட்ட நிலையில் 37 நபர்களும் இதுவரை அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தூக்கம் இழந்து இரவு பகலாக அர்ப்பணிப்பு உணர்வுடன், தங்களது உயிரையும் பணயம் வைத்து சமூக நலனுக்காக பணியாற்றி வரும் கரூர் மாவட்ட அரசு மருத்துவமனை முதல்வர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், துாய்மைப்பணியாளர்கள் என அனைவருக்கும் இந்த வெற்றி சமர்ப்பிக்கப்பட வேண்டும். அனைவரது கூட்டு முயற்சியாலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர், மதிப்பிற்குறிய தலைமை செயலாளர், சுகாதாத்துறை செயலாளர் ஆகியோர் தினந்தோறும் காணொலி வாயிலாக தொடர்பு கொண்டு கொரோனா தொற்று தடுப்பு பணிகள் குறித்தும், சிகிச்சை முறைகள் குறித்தும் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் உடலில் ஏற்படும் முன்னேற்றம் குறித்தும் தொடர்ந்து தகவல்களை கேட்டறிந்து தக்க அறிவுரைகளை வழங்கி வருவதால் இத்தகைய வெற்றி கரூர் மாவட்டத்தில் சாத்தியமாயிற்று.

அனைவரின் கூட்டு முயற்சியால் விரைவில் கரூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று இல்லை என்ற நிலையினை உருவாக்க அனைவரும் தொடர்ந்து பாடுபடுவோம்.

இவ்வாறு தெரிவித்தார்.

பின்னர் அயராது உழைக்கும் துாய்மைப்பணியாளர்களுக்கும் பழக்கூடைகளை வழங்கி மாவட்ட ஆட்சித்தலைவர் வாழ்த்து தெரிவித்து பாராட்டினார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு.இரா.பாண்டியராஜன், அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.ரோஸி வெண்ணிலா, கூடுதல் முதல்வர் மரு.தேரணிராஜன், திண்டுக்கல் அரசு மருத்துவமனை முதல்வர் மரு.விஜயகுமார் உள்ளிட்ட மருத்துவர்கள், கரூர் வட்டாட்சியர் திருமதி.அமுதா உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தெடாடர்பு அலுவலர், கரூர்.